**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# மாநகர தரவுகளுக்கான சர்வதேச கவுன்சில் வழங்கும் பிளாட்டினம் நிலை ISO தரவுகள் சான்றளிப்பினை ப்ராம்ப்ட்டன் நகரம் பெறுகிறது

*செயல்திறன் மேலாண்மைக்கு தங்களை அர்ப்பணித்துக்கொண்ட உலகத்தரம் வாய்ந்த நகரங்களின் உலகளாவிய நெட்வொர்க்கில் சேர்ந்து கொள்கிறது*

ப்ராம்ப்ட்டன், ON (பிப்ரவரி 17, 2021) – இன்றைய தினம், ப்ராம்ப்ட்டன் நகரம் பிளாட்டினம் நிலை ISO 37120 சான்றளிப்பினை பெற்றதாக, மாநகர தரவுகளுக்கான சர்வதேச கவுன்சில் (WCCD), அறிவித்தது; முடிவுகளை திறம்பட மேற்கொள்வதற்காக உபயோகிக்கப்படும் தரவுகளை சேகரிப்பதில், பகிர்வதில் மற்றும் உபயோகிப்பதில் உயரிய தரம் கொண்டிருப்பதற்காக இது வழங்கப்படுகிறது.

உலகெங்கிலுமாக, WCCD ISO 37120 பிளாட்டினம் நிலை சான்றளிப்பினை பெற்ற 35 நாடுகளில் உள்ள 100 மாநகரங்களுக்கும் மேலாக இருக்கும் ஒரு நெட்வொர்க்கிற்கு WCCD நமது நகரை வரவேற்கிறது; இந்த நிகழ்ச்சியில் உள்கட்டுமானம் மற்றும் சமுதாயங்களுக்கான துறையின் அமைச்சர் மேதகு கேத்தரீன் மெக்கென்னா அவர்கள் சார்பாக தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து கொண்டனர். 104 குறிப்பு காட்டிகளில் 90க்கும் மேலான குறிப்புகாட்டிகள் WCCD யின் ISO 37120 தரநிலைகளுக்குள்ளாக இருக்கின்றன என நகர நிர்வாகம் தெரிவித்தது. இது, கனடா நாட்டின் அரசாங்கம் ஆதரவளிக்கின்ற கனடா நாட்டு நகரங்களின் திட்டங்களுக்கான தரவுகளின் [Data for Canadian Cities Project (DCCP)] ஒரு அங்கமாகும்.

WCCD குளோபல் நெட்வொர்க்கின் உறுப்பினராக இருக்கும் இந்த நகரமானது, சேவைகளை மேம்படுத்துவதற்கும், குடியிருப்பாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் உலகெங்கிலும் தரவுகளால் உந்தப்படும் பிற நகரங்களுக்கு நிகராக உள்ளூர் அனுபவங்களையும் அளவுகோல்களையும் பகிர்ந்து கொள்ளும். தனது WCCD குளோபல் நெட்வொர்க் கூட்டாளர்களுடன் சேர்ந்து, ஒரு புத்திசாலித்தனமான, நிலைத்து நிற்கவல்ல, நெகிழ்திறன் கொண்ட, வளமான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய சமூகத்தை தொடர்ந்து கட்டமைப்பதற்காக, சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் குறிகாட்டிகளை ப்ராம்ப்ட்டன் நகரம் அளவிடும்.

மாநகர தரவுகளுக்கான சர்வதேச கவுன்சில் (WCCD), மற்றும் சான்றளிப்பு பற்றி மேலும் அறிந்துகொள்ள வருகை தரவும்: www.dataforcities.org.

**கனடா நாட்டு நகரங்களுக்கான தரவுகள் பற்றி**

உயர் திறன், ஒப்பிடக்கூடிய மற்றும் சுயாதீனமாக சரிபார்க்கப்பட்ட நகராட்சி தரவுகளை, கனடா நாடெங்கிலுமாக உள்ள நகராட்சித் தலைவர்களுக்கு கொண்டு சேர்க்கின்ற இந்த கனடா நாட்டு நகரங்களின் திட்டங்களுக்கான தரவுகள் [Data for Canadian Cities Project (DCCP)] , மாற்றம் உண்டாக்கக்கூடிய, மூன்று ஆண்டுக்கால, கனடா நாடு முழுவதிலுமாக அமலாகவிருக்கும் திட்டம் இதுவாகும்; தற்போது நாடு முழுவதும் தரவுகளால் உந்தப்படுகின்ற பதினைந்து நகராட்சிகளில் நடந்து வருகிறது. மத்திய உள்கட்டமைப்பு மற்றும் சமூகங்களுக்கான அமைச்சகத்தால் ஆதரிக்கப்படுகின்ற இந்த திட்டமானது, நகராட்சித் தலைவர்களுக்கு முக்கியமான முடிவுகளை எடுக்கத் தேவையான தரவுகளை வழங்குகிறது; அதே சமயத்தில் உள்ளக அடிப்படை தரம் குறித்தலையும் பலப்படுத்துகிறது; மேலும் கனடா முழுவதும் முப்பது நகரங்களுடனும் உலகளவில் நூறு நகரங்களுடனும் அங்கு இருக்கின்ற வலுவான, உயர்நிலைக் குறிகாட்டிகளுடன் ஒப்பீடு செய்து செயல்படுத்துகிறது. நிலைத்து இருக்கவல்ல வளர்ச்சியை வலுப்படுத்துவது முதல், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவது , மற்றும் காலநிலை மாற்றங்களுக்கான நோக்கங்களை அடைவது வரை, மற்றும் முக்கியமான முதலீட்டு முடிவுகளை அறிவிப்பது வரை, புத்திசாலித்தனமான, நிலைத்து நிற்கவல்ல, நெகிழ்திறன் கொண்ட, வளமான, மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய சமூகங்களை உருவாக்கத் தேவையான தரவுகளை, நாடு முழுவதும் உள்ள நகராட்சியில் முடிவெடுப்பவர்களுக்கு கனடா நாட்டு நகரங்களின் திட்டப்பணிகளுக்கான தரவுகள் வழங்குகின்றன .

**அறிஞர் கூற்றுக்கள்**

“ப்ராம்ப்ட்டன் நன்கு நிர்வாகம் செய்யப்பட்டு வரும் நகரமாகும், இதில் நாங்கள் பாதுகாப்பான, நிலைத்துநிற்கவல்ல மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வெற்றிகரமான ஒரு சமுதாயத்தை உருவாக்குகிறோம். ISO 37120 பிளாட்டினம்-நிலை சான்றிதழ் பெற்ற 100 க்கும் மேற்பட்ட உலகளாவிய கூட்டாளர்களின் நெட்வொர்க்குடன் பணிபுரிகின்ற நாங்கள், எங்கள் உள்ளூர் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வோம், மற்றும் அதேபோல் தரவுகளால் உந்தப்படும் நகரங்களிலிருந்து ப்ராம்ப்ட்டன்வாசிகளுக்கு மட்டுமல்லாமல், கனடா முழுவதும் உள்ள மக்களுக்கும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவோம். எங்கள் உயர் தரமான தரவுகளுக்காக, ப்ராம்ப்ட்டன் நகரம் அங்கீகாரம் பெற்றுள்ளது என்பதில் நான் அளவற்ற பெருமிதம் கொள்கிறேன்; மேலும் புத்திசாலித்தனமான, நிலைத்துநிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான சமூகங்களை உருவாக்க இதர WCCD பிளாட்டினம்-நிலை நகரங்களுடன் இணைந்து பணியாற்றுவதை நான் எதிர்பார்க்கிறேன்.

- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்

“எங்கள் குடியிருப்பாளர்களுக்கு பயனுள்ள முடிவுகளை எடுப்பதற்கு தரவுகள் அவசியமாகும்; மற்றும் கூட்டுறவு மற்றும் தரம்குறித்தல் ஆகியவை பாதுகாப்பான, நிலைத்துநிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஒரு நகரத்தை உருவாக்க எங்கள் கூட்டாளர்களிடமிருந்து தொடர்ந்து கற்றுக்கொள்ள அனுமதிக்கின்றன. உயரடுக்கு WCCD உலகளாவிய நெட்வொர்க்கின் ஒரு பகுதியாக இருந்தபடி, ப்ராம்ப்ட்டனில்

எங்களுக்குத் தெரிந்ததைப் பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்பையும் பெறுவோம்; மேலும் ப்ராம்ப்ட்டன் மற்றும் கனடா நாடு முழுவதிலும் உள்ளவர்களின் வாழ்க்கையை மேம்படுத்த எங்கள் கூட்டாளர்களிடமிருந்து கற்றுக்கொள்ளலாம். நகரங்கள் பற்றிய தரவுகளுக்கான சர்வதேச கவுன்சிலால் அங்கீகரிக்கப்படுவதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம்; மேலும் எங்கள் நிலைத்திருக்க வல்ல தன்மையை மேம்படுத்துவதற்கும் நமது பெரிய சமூகத்தில் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும் இந்த வாய்ப்பினைப் பயன்படுவோம். "

- *ஹர்கிரத் சிங், தலைமைப் பொறுப்பு, பெருநிறுவன சேவைகள்; நகர கவுன்சிலர், வார்டுகள் 9 & 10, ப்ராம்ப்ட்டன் நகரம்*

"ப்ராம்ப்ட்டன் நகரில், எங்கள் குடியிருப்பாளர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக, தரவுகளால் உந்தப்பட்டு முடிவு மெற்கொள்ளுதல், நகராட்சி சொத்துக்களை திறம்பட நிர்வகித்தல் மற்றும் ஒத்துழைப்பு மற்றும் ஆலோசனை வழங்குதல், கூட்டாண்மைகளை மேம்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் எங்கள் அன்றாட நடவடிக்கைகளை மேம்படுத்த நாங்கள் தொடர்ந்து முயற்சித்து வருகிறோம். நாங்கள் பெற்ற ISO 37120 பிளாட்டினம்-நிலை சான்றிதழ் மூலம் அங்கீகரிக்கப்பட்ட உலகளாவிய முன்னணி நகரமாக பிராம்ப்டன் தொடர்கிறது; இதுவே எங்கள் குடியிருப்பாளர்களுக்கு நன்கு நிர்வகிக்கப்படவேண்டிய நகரமாக ஆக்கவேண்டும் எனும் கவுன்சிலின் முன்னுரிமையை முன்னெடுக்கிறது. "

- டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்

"பெரிய மற்றும் சிறிய ஆகிய அனைத்து சமூகங்களுக்கும் நவீன பொது உள்கட்டமைப்பைத் திட்டமிடவும், கட்டமைக்கவும், நல்ல தரவுகள் தேவை. தரவுகளுக்கான உலகத் தரங்களை அடைவது மிக முக்கியமானது. கனடா நாட்டின் நகரங்களுக்கான ஆரம்ப கட்ட திட்டப்பணிகளுக்கான தரவுகளின் மூலமாக, '*நகர தரவுகளுக்கான உலக கவுன்சிலுடன்*' இணைந்து, கனடா நாடு முழுவதிலுமாக பல சமூகங்களில் உள்ள நகராட்சி தலைவர்களுக்கு அதைச் செய்ய நாங்கள் உதவுகிறோம். நகராட்சி தரவுகளுக்கான ISO தர நிலையை ப்ராம்ப்ட்டன் நகரம் பெற்றுள்ளதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இது தரமான தரவுகளைக் கொண்டு, நகரின் திட்டப்பணிகளில் திட்டமிட உதவும் மற்றும் ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்ட முடிவெடுப்பதில் வழிகாட்டும். கனடாவின் உள்கட்டமைப்பு திட்டமானது, ஆயிரக்கணக்கான திட்டப்பணிகளுக்கு முதலீடு செய்கிறது, நாடு முழுவதும் வேலைவாய்ப்புகளை உருவாக்குகிறது, மற்றும் வலுவான சமூகங்களை உருவாக்குகிறது. "

- *மேதகு கெத்தரீன் மெக்கென்னா, அமைச்சர், உள்கட்டமைப்பு மற்றும் சமுதாயங்கள் துறை*

"*நகர தரவுகளுக்கான சர்வதேச கவுன்சில்* சார்பாக, ப்ராம்ப்ட்டன் நகரம் WCCD இன் ISO 37120 பிளாட்டினம் சான்றளிப்பு பெற்றமைக்காக, இந்த நகரத்தை வாழ்த்துவது எனது மகிழ்ச்சியளிக்கிறது. இந்த சாதனையானது, உங்கள் நகரின் சிறந்த ஊழியர்களின் அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாகும்; மேலும் ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்ட முடிவெடுப்பதில் கவுன்சிலின் உறுதிப்பாட்டினை இது பிரதிபலிக்கிறது. மேம்பட்ட சேவை வழங்கல், பொருளாதார மேம்பாடு, திட்டமிடல் மற்றும் உள்கட்டமைப்பு முதலீடு ஆகியவற்றுக்கான பிரயோகப்படுத்தல்களுடன், நகரத்தின் ISO-சான்றளிக்கப்பட்ட தரவுகள், ப்ராம்ப்ட்டன் நகரின் பலங்களையும் வளர்ச்சிக்கான வாய்ப்புகளையும் எடுத்துக் காட்டுகிறது. உள்கட்டமைப்பு மற்றும் சமூகங்கள் அமைச்சகம் மற்றும் மேதகு அமைச்சர்

மெக்கென்னாவுடனான எங்கள் கூட்டாண்மை மூலம், இந்த ஆண்டில் கனடா நாட்டில் உள்ள நகரங்களின் தரவுகளுக்கான திட்டப்பணிகளிலும் மற்றும் வரவிருக்கும் ஆண்டுகளிலும் ப்ராம்ப்ட்டன் நகரத்துடன் இணைந்து பணியாற்ற நாங்கள் எதிர்பார்க்கிறோம். "

- *டாக்டர் பேட்ரிசியா மெக்கார்னீ, தலைவர் மற்றும் தலைமை செயல்பாட்டு அதிகாரி,* WCCD

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். ***Twitter***, ***Facebook***, மற்றும் ***Instagram*** ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். ***www.brampton.ca*** இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
குர்வீந்தர் சிங்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-2028 | Gurvinder.A.Singh@brampton.ca